கைக்கடிகாரம்!
அழகுசாதன, அன்பளிப்பு,
எவர்சில்வர்,
விளையாட்டுப்
பொருள்களுக்கு
நாடுங்கள்;
ராஜா
ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார்வீதி
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

நெல்லுடைக்கும்,
மா அரைக்கும் இயந்திர
உதிரிப்பாகங்கள்
மற்றும்
பொலித்தீன்,
கேக், குளிர்பான
தயாரிப்புக்களுக்கு
ராஜா
ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 07 வியாழக்கிழமை (22 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 26

நத்தாருக்குப் பின்னரே அரசு-புலிகள் பேச்சு; புத்தாண்டுக்கு முன் நடப்பதும் சந்தேகமே!

அமைச்சரவையில் மீண்டும் மாற்றம் வரும்

கொழும்பு, டிச. 22

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சரவையில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மாற்றங்கள் இடம்பெறும் வாய்ப்பு உள்ளதாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் புதிய கூட்டத் தொடர் ஜனவரி 6 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதால், அதற்கு முன் அமைச்சரவையில் மாற்றங்கள் நிகழ இடமுண்டு என்று கூறப்படுகிறது.

பிரச்சினைகள் அதிகம் உள்ள அமைச்சுக்கள், அமைச்சர்களின் அனுபவங்கள், ஆற்றல்கள் ஆகியன குறித்து ஆராயப்பட்டு அதனடிப்படையில் மாற்றங்கள் இடம்பெறும் என நம்பப்படுகிறது. (ஒ-10)

பல்கலை. மாணவரின் விடுதிக்கு 3 கட்டடங்கள்

ஜனாதிபதி சந்திரிகா பணிப்பு

கொழும்பு, டிச. 22

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவின் பணிப்பின் பேரில் பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிக்காக மூன்று கட்டடங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

நீதி, அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை தெரிவிப்பதற்காக நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி, இரத்மலானை ரீட் அவென்யூ பகுதிகளில் உள்ள மூன்று கட்டடங்கள் இதற்காக பயன்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

விடுதி வசதி கோரி பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த வாரம் முதல் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வந்தமை தெரிந்ததே (ஒ-3)

600 போலி வெளிநாட்டு முகவர் நிலையங்கள்!

நாட்டில் இயங்குவதாக தகவல்

கொழும்பு, டிச. 22

தற்போது நாட்டில் 600 போலி வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிலையங்கள் இயங்கிவருவதாகத் தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக தொழில் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

ஐ. தே. கட்சியின் ஆட்சிக்காலத்தில் தொழில் அமைச்சுக்குக் கிடைத்த வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தனிப்பட்ட வேலைவாய்ப்பு முகவர்களுக்கு விற்கப்பட்டதாகவும் அமைச்சர் குற்றம் சாட்டினார். (ஒ — 10

யாழ். பிராந்தியத்துக்கு புதிய ராணுவ அதிகாரிகள்

கொழும்பு, டிச. 22

யாழ். பிராந்திய கட்டளையிடும் அதிகாரியாக மேஜர் ஜெனரல் லால் வீரசூரிய நியமனம் பெற்றுள்ளார்.

யாழ். பிராந்திய கட்டளையிடும் அதிகாரியாக இதுவரை பணியாற்றிய மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா விசேட இராணுவப்பயிற்சி பெறுவதற்காக லண்டன் செல்லவிருப்பதாலேயே புதியவர் நியமனம் பெற்றுள்ளார்.

இதேவேளை, கூட்டு நடவடிக்கைகள் தலைமையகத்தில் இதுவரை கட்டளையிடும் அதிகாரியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்க பூநகரி, ஆனையிறவு [4 ஆம் பக்கம் பார்க்க]

ஸ்ரீலங்கா தரப்பு பின்னடிப்பு

கொழும்பு, டிசம்பர் 22

ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இந்த வாரத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட இரண்டாம் கட்டப் பேச்சுக்களை மேலும் தள்ளிப் போடும் நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு இறுதி நேரத்தில் பின்னடித்திருப்பதே பேச்சுக்கள் தள்ளிப் போனமைக்குக் காரணமாகும்.

நத்தாருக்குப் பின்னரே இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நடைபெறும் என அரசு தரப்பில் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா அறிவித்துள்ள போதிலும், எதிர்வரும் புத்தாண்டுக்கு முன்னர் பேச்சு ஆரம்பமாவது சந்தேகமே என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடுவதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்தே—

பேச்சுக்கள் நத்தாருக்குப் பின்னர் நடைபெறும் என்ற தகவலை, அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சருமான தர்மசிறி சேனநாயாக்கா வெளியிட்டார்.

மேற்படி பத்திரிகையாளர் மாநாட்டில் வலியான தகவல்கள் குறித்து பி. பி. ஸி. சிங்கள சேவை தெரிவித்ததாவது:-

நத்தாருக்கு முன்னர் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு வாய்ப்பு ஏதுமில்லை.

பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சில முன்னுரிமைகள் குறித்து விடுதலைப் புலிகளிடம் வினவப்பட்டது எனினும் அதற்குப் பதில் கிடைக்கவில்லை எனக் கூறப்பட்டது

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளிடம் விளக்கம் கோர அரசு முடிவாம்!

கொழும்பு, டிச. 22

யாழ்ப்பாணத்தில் உள்ள வெகுஜன தொடர்பு சாதனங்களில் அரசாங்கம் தொடர்பாகவும், முதற் சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொண்ட அரசதரப்பு பிரதிநிதிகள் தொடர்பாகவும் வெளிவந்த கருத்துக்கள் குறித்து —

இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்னராக விடுதலைப் புலிகளிடமிருந்து விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் விரும்புவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாக புலிகளின் தலைமைத்துவத்துக்கு கையளிக்கப்படவுள்ள கடிதம் அரசாங்க உயர்மட்டத்தினால் வரையப்பட்டுவிட்டதாகவும் —

அது விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் அறிய முடிகிறது —

விடுதலைப் புலிகளிடம் இருந்து இணக்கத்தைப் பெற்று, நிலைமையைதெளிவுபடுத்திய பின்னரே, இரண்டாம் கட்டப் பேச்சுக்கான

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரசி,

அப்ப... கொழும்பிலை மினி மாநாடு நடத்த வேண்டியது தான் கண்டியளோ!...

எதிர்வரும் ஜனவரி முதல்

கூடுதல் மாணவருக்கு மகாபொல கிடைக்கும்

கொழும்பு, டிச. 22

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சூடுதலான பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில்களும் உதகாரப் பணமும் கிடைக்கவிருக்கின்றன.

மகாபொல புலமைப் பரிசில் பெறும் மாணவரின் தகுதிக்கு பெற்றோர்களின் வருமான உச்சவரம்பு வருடாந்தம் 48 ஆயிரம் ரூபா விலிருந்து 90 ஆயிரம் ரூபாவரை அதிகரிக்கப் பட்டிருக்கிறது.

தற்போது சுமார் 35 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலுகிறார்கள் இவர்களில் சுமார் 30 ஆயிரம் பேருக்கு மகாபொல புலமைப் பரிசில்களோ அல்லது உதகாரப் பணமோ கிடைக்கின்றன.

மகாபொல புலமைப் பரிசில் திட்டத்துக்குத் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஒரு மாணவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

தீர்வுக்கு வழிவகுக்கும் யுத்த நிறுத்தமே தேவை!

ரூபவாஹினி பேட்டியில் சந்திரிகா

கொழும்பு, டிச. 22

நாம் மேற்கொள்ளவிருக்கும் யுத்த நிறுத்தம் சாதாரண ஒரு யுத்த நிறுத்தமாக அமையாமல், வடபகுதி மக்களும், தென் பகுதி மக்களும் எதிர்பார்க்கும் — போரை நிறுத்தி நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் அரசியல் தீர்வொன்றுக்கு வழிவகுக்கும்நடவடிக்கையின் முதற்படியாக அமைய வேண்டும்.

இதனை நாம் விடுதலைப் புலிகளுக்கு மிகத் தெளிவாக கூறியுள்ளோம்.

— இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று ரூபவாஹினியில் ஒளிபரப்பான அவரது பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா ரூபவாஹினியில் தோன்றி நாட்டு

மக்களுக்கு உரையாற்றுவார் என நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும்—

நேற்று மாலை சந்திரிகாவின் பேட்டி நிகழ்ச்சி ஒன்றையே ரூபவாஹினி ஒளிபரப்பியது.

பிரபல பத்திரிகையாளரான லூஸியன் ராஜகருணநாயக்க ஜனாதிபதி சந்திரிகாவை பேட்டி கண்டார்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தப் பேட்டியில் தெற்கில் ஏற்பட்டுள்ள வேலைநிறுத்தப் பிரச்சினை, விலைவாசி உயர்வுச் சிக்கல் தனியார் வர்த்தகர்களின் ஏகபோக உரிமை, நிர்வாகத் துஷ்பிரயோக விவகாரம் உட்பட பல விடயங்கள் குறித்து சந்திரிகா குறிப்பிட்டார்.

ஆனால் இனப்பிரச்சினை

(3ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தவர் பலரும் பங்குபற்றுவதற்கு முயற்சி!

தமிழாராய்ச்சி மாநாட்டில்

யாழ்ப்பாணம், டிச 22

ஜனவரி முதலாம் திகதி முதல் தஞ்சாவூரில் நடைபெறவிருக்கும் எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றும் நோக்குடன் யாழ்ப்பாணத்திலிருந்து யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பல பிரமுகர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் கொழும்பு சென்றுள்ளனர்.

எனினும்—

அவர்கள் அனைவருக்கும் மாநாட்டில் பங்குபற்றவும், இந்தியா செல்லவும் அனுமதி கிடைக்குமா என்பது சந்தேகமே என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாநாட்டில் பங்குபற்றுவதற்கு ஜப்பான் நாட்டுக்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

பிரபாவின் அருமை பெருமைகளை உலகுக்கு பறைசாற்றியவர் கி.ஆ.பெ.

அரசியல்துறை இரங்கல் செய்தி

யாழ்ப்பாணம், டிச. 22

''விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் அருமை, பெருமைகளை உலக மக்களுக்கு பறைசாற்றியவர் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்''

கி. ஆ. பெ. மறைவு குறித்து விடுதலைப் புலிகளின் தமிழீழ அரசியல்துறை விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அடிமைத் தளையில் கட்டுண்டு மூடநம்பிக்கையில் திளைத்திருந்த தமிழ் மக்களிடையேதந்தை பெரியாருடன் இணைந்து தன்மதிப்பு இயக்கத்தை நடத்தி மொழி, இன, நாட்டுப்பற்றையும், அரசியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்காக கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக அயராது உழைத்துவந்த முதுபெரும் தலைவர் கி ஆ பெ. விசுவநாதம் அவர்களின் மறைவானது உலகத் தமிழினத்துக்கு பேரிழப்பாகும்.

கடந்த 11 ஆம் திகதி 96 ஆவது அகவை கண்ட முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ.

[4ஆம் பக்கம் பார்க்க]

சிப்பாய் பலி

கொழும்பு, டிச. 22

காரைநகர் படை முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் குறைந்தது ஓர் இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

மத்திய அரசின் கீழ்

கொழும்பு, டிச. 22

நாடு முழுவதிலும் உள்ள கிராம சேவையாளர்களை பொது நிர்வாக சேவைக்குள் கொண்டுவருவது என அமைச்சரவை நேற்று முடிவெடுத்துள்ளது.

இதுகாலவரை மாகாண சபையின் கீழ் பணியாற்றிய கிராம சேவையாளர்கள் இனி மத்திய அரசாங்கத்தின் கீழ் பணிபுரிவார்கள். (ச)

கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர்

கொழும்பு, டிச. 22

கொழும்பு பல்கலைக்கழக புதிய துணைவேந்தராக பேராசிரியர் டபிள்யூ. பி. லக்ஷ்மன் பதவி ஏற்றுள்ளார்.

கடந்த 15 வருடங்களாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய இவர் பொருளியல் துறை பீடாதிபதியாகவும் பணியாற்றினார். (ஒ-3 6)

உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள ஒரு சில ஈழத் தமிழ் அறிஞர்களுக்கே அழைப்பு!

பாதுகாப்பு, அரசியல் சூழ்நிலைகள் காரணமாம்

கொழும்பு, டிச. 22

தஞ்சாவூரில் ஜனவரிமாதம் முதலாம் திகதியிலிருந்து 5 ஆம் திகதிவரை பலகோடி ரூபா செலவில் வெகு கோலாகலமாக நடைபெறவிருக்கும் எட்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பு விரல் விட்டு எண்ணக்கூடிய இலங்கை தமிழ் கல்விமான்களுக்கும், பேராசிரியர்களுக்குமே இம்முறை கிடைத்துள்ளது.

இவர்களுக்கு கூட உத்தியோகபூர்வ அழைப்புகள் அனுப்பப்படவில்லை. முதலில் தங்கள் புகைப்படங்களை அனுப்பிவைக்குமாறும் பின்னரே அவர்களுக்கான உத்தியோகபூர்வ அழைப்பிதழ்கள் படத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படும் என்றும் மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மாநாட்டின் இலங்கைக் கிளை ஊடாக ஆயிரக்கணக்கான கல்வி மான்களும் தமிழ் அறிஞர்களும் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தனர் ஆனால் அவை முற்று முழுதாக நிராகரிக்கப் பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இம்முறை மாநாட்டில் கலந்து கொள்ள மிகக் குறைவான எண்ணிக்கையானோருக்கே அனுமதி வழங்கப்பட்டிருப்பதற்கு காரணம் பாதுகாப்பு மற்றும் அரசியல் சூழ்நிலைகளே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழைப்புக் கிடைத்துள்ள அனைவருமே தமது புகைப்படங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். புகைப்படங்கள் ஒட்டப்பட்ட அழைப்பிதழ்களே மாநாட்டு ஏற்பாட்டாளர்களால் அனுப்பி வைக்கப்படும் என்று [illegible] அதிகாரி ஒருவர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சகல பாடசாலை புத்தகங்களும் குறித்த விலையில் இருந்து 5% கழிவுடன் விற்பனையாகின்றன. பாடசாலை உபகரணங்கள், கொப்பிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன நியாய விலையில் விற்பனையாகின்றன. ஞானம் புத்தக நிலையம், நாச்சிமார் கோயிலடி, 635, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8063)

கோழிக்குஞ்சு விற்பனை

Christombu Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்டர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34300)

விற்பனையாகிறது

சீவம் கலண்டர்கள் பொக்கற் கலண்டர்கள், வியாபாரத்திற்கு அடித்து கொடுப்பதற்குரிய சகல கலண்டர்களும், டயறிவகைகளும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 165, மின்சார நிலையம். தலைமையகம்: மக்மிலன், யாழ்ப்பாணம். (சி-9929)

நத்தார் வாழ்த்துமடல்கள்

புத்தம் புதிய நத்தார், புதுவருட வாழ்த்துமடல்கள், மியூசிக்கல் வாழ்த்துமடல்கள் விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு. ஆனந்தீஸ், புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (34279)

அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விற்பனையாகின்றன. நேரஅட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936

தேவை

மருந்தாளர் தராதரப் பத்திரம் உடைய மருந்தாளர் (Pharmacist) தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 27-12-1994க்கு முன் கடித மூலம் விண்ணப்பிக்கவும். இல. 736, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34268)

பட்டயக்கணக்காளர்

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 2 திறமைச்சித்திகள் பெற்றோர், இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவன மாணவர்களாக தம்மை பதிவுசெய்து கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு: இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (34298)

இலகு திருமண சேவை

31 வயது, அச்சுவிலி செவ்வாய் 7, ஜேர்மனியில் தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. விவாகமாகி அழைத்துச் செல்லலாம். மணமகன் யாழ். வந்துள்ளார். தொடர்பு: து. விமலா, யாழ் நாச்சிமார் கோயிலடி. (34262)

ஒளிவிழா

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உறுப்பினர்கள் ஊழியர்கள், தொண்டர்கள், மாணவர்கள் ஆகியோர் இணைந்து நடத்தும் ஒளிவிழா நாளை வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு யாழ். கிளைத் தலைமையகத்தில் நடைபெறும்

தென்னிந்தியத் திருச்சபை யாழ். அத்தியட்சாதீன முதல்வர் கலாநிதி எஸ். ஜெபநேசன் பிரதம விருந்திரனாகக் கலந்து கொள்வார். (ஐ)

பிரசவ விடுதி

இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த இரண்டரை வருட காலமாக மூடப்பட்டிருக்கும் அளவெட்டியிலுள்ள அரசினர் பிரசவ விடுதியை மீண்டும் திறந்து இயங்கச் செய்வதற்கு யாழ். சுகாதார திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. (ஒ-135)

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 95

DAY CLASS

(94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கானது)

பிரிவு III

ஆரம்பம்: 2 - 1 - 1995

காலை 8-00 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

★ பிரிவு I, II இற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

(சி-22)

விற்பனையாகின்றன

இம்மாதம் 28ஆம் திகதி நடைபெறவுள்ள

உதவி ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி

★ பொது உளச்சார்பு

★ பொது அறிவு

அஸ்ரன் வெளியீடு – விலை ரூபா 110/-

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்.

[சி-17]

10-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ரீ. ஏ. செல்வக்குமாரன்

(கிச்சி)

(முன்னாள் ஆங்கில உதவி ஆசிரியர், மன்/நறுவிலிக்குளம், றோ. க. த. பாடசாலை, மன்னார்)

அன்னையின் மடியில்; 09 — 12 — 1959

சிங்கள அரக்கரின் பிடியில்; 22 — 12 — 1984

எங்கள் அன்புச்செல்வமே! உம்மைப் பிரிந்து ஆண்டுகள் பத்து கழிந்துவிட்டாலும், அன்று போல் இன்றும் உமது பிரிவால் ஆறாத்துயரில் வாடி நின்று உன் ஆத்மசாந்திக்காக வேண்டி நிற்கும்;

உனது அன்பு:

ஐயா, அம்மா, அக்காமார், அண்ணாமார், தம்பியர், தங்கை, மைத்துனர்மார், அண்ணி, மருமக்கள்.

ரீ. அமிர்தலிங்கம்,
வடக்குத் தெரு,
தொண்டமனாறு. [8093]

கற்பனைகள் கனவுகளாகி
கண்ணீரில் கரையும்

4-ம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன் பிருந்தன் தனபாலசிங்கம்

அன்னையின் மடியில்	ஆண்டவன் மடியில்
ஆனந்த உதிப்பு:	ஆறாத்துயரம்:
31—05—1985	22—12—1990

ஆறாத துயரமதில் ஆண்டு நான்கு கழியும் வேளை,
ஆண்டவனும் மனமிரங்கி அருளிவிட்டான் மதீசனை
ஆற்றுகின்றோம் உன் நினைவை அவனிடத்தில் தான்
ஆனாலும் முடியவில்லை ஆறாகப் பெருகும் கண்ணீர்
ஆறாலும் முடியவில்லை, அணைபோட முயலவில்லை
ஆருயிரே சமர்ப்பிக்கின்றோம் எம் கண்ணீர்ப் பூக்களை,

உன் நினைவால் வாடி வாழும்,
அப்பா, அம்மா, அக்கா, தங்கை,
தம்பி, உற்றார், உறவினர்.

4, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
சரசாலை மத்தி,
சாவகச்சேரி. (34267)

BITSMANS

கல்வி நிறுவனம்

மானிப்பாய்

SPOKEN ENGLISH

M. A. ஹரி B. A. Dip-in-Eng.

ஆரம்பம்: 23-12-1994

வெள்ளி 9-00 a.m.

[சி-25]

VACANCY

POST OF CLERK
Y. M. C. A. – JAFFNA

For immediate Appointment. Experience in Teaching English Stenography with good knowledge in Accounts & Tamil Typing is an advantage

Salary — NEGOTIABLE
Closing Date — 31—12—1994

Apply to:
THE GENERAL SECRETARY,
Y. M. C. A.,
JAFFNA.

(சி-10079)

வல்வெட்டித்துறை– நகராட்சிமன்றம்

வரவு – செலவு மதிப்பீடுகள் - 1995

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் 1995ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு மதிப்பீடுகள் இவ் அலுவலகத்தில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்படுமென நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம்-255) 1979ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178(3)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

ந. ஞானவேல்,
செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
16-12-1994. [சி-10080]

20ஆம் ஆண்டு

நினைவஞ்சலி

திருமதி
கனகாம்பிகை சபாரத்தினம்
(திலகம்)

தோற்றம்: 16 — 03 — 1927 மறைவு: 22 — 12 — 1974

திதி: 09 — 01 — 1995

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் இல்லாமல் இருபது வருடங்கள்
எப்படித்தான் போயின?!
ஆச்சரியம் ஏதும் இல்லை அன்புத் திலகமே!
அருமை மனைவியாய், அன்பான அன்னையாய்
நீங்கள் வாழ்ந்த ஒவ்வொரு நிமிடங்களும்,
எங்கள் உள்ளத்தில், புத்தம் புதிதாய் –
பசுமையாய் - பத்திரமாய்,
இப்போதும் இருக்கின்றன!
உங்கள் அன்பும், கண்டிப்பும்
எப்போதும் எங்களை வழிநடத்துகின்றன.
இன்பத்தில் மென்னகை பூத்தும்,
துன்பத்தில் ஆறுதல் அளித்தும்
எங்களுடன் தானே வாழ்கின்றீர்கள்!
என்றும் எங்கள் நினைவஞ்சலிகள்
உங்கள் ஆத்மாவுக்கு சமர்ப்பணம்!

உங்கள் நினைவில் வாழும்;
பபாவும், பிள்ளைகளும்.

"திலக வாசம்",
சாவகச்சேரி. (8094)

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்திலுள்ள பனை, தென்னை மர தீராந்தி, சிலாகைவகை விற்பனையாளர்களை ஒருங்கிணைக்கும் முகமாக தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனத்தில் பதிவு செய்தவர்கள் மட்டும் எதிர்காலத்தில் மர விற்பனையில் ஈடுபட அனுமதிக்கப்படுவார்களென்பதால், சகல பனை, தென்னை மரக்காலை உரிமையாளர்களும், பனை, தென்னை மர விற்பனையாளர்களும் 15-01-1995இற்கு முன் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் தம்மை தவறாது பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்.

230, இராமநாதன் வீதி,
நிருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [சி-10083]

G. A. Q. 96

பேராதனைப் பல்கலைக்கழகம்

★ A/L இல் 3 பாட சித்தியுடன் 180 புள்ளிகளை பெற்றுக் கொண்டவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ இதற்கான பல்கலைக்கழக பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்:

24 - 12 - 94 (காலை 9 மணி)

விவரங்களுக்கு:

S. அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-30)

பிறந்த நாள்

நினைவலைகள்

தோற்றம்: 22 — 12 — 1944

மறைவு: 10 — 11 — 1990

சுப்பிரமணியம் தியாகராஜா

(Partner of Uma Trading Centre, Colombo)

கண்ணின் கருமணியாக எங்களைக் காத்து
கார்கால மேகமென மறைந்ததேனோ
தங்கி நின்ற ஆலமரம் வீழ்ந்து விடில்
பறவைகள் நாம் நிழல் தேடி எங்கு செல்வோம் –
அப்பா!

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,

825, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [34295]

3-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 10 — 10 — 1928

இறப்பு: 25 — 12 — 1991

திருமதி செல்வராசு வேலாயுதம்

திதி: 22–12–1994

மூன்றாண்டு சென்றதம்மா உணர்விழந்து வாடுகிறோம்
வாழப் பிடிப்பில்லை வழிநடத்த யாருமில்லை
ஈன்றமரம் சரிந்ததுமே கதிகலங்கிப் போனோமம்மா
செய்வதறியாது செயலிழந்து வாழ்ந்த போதிலும்
மெய்யான உங்கள் உயிர் – என்றும்
எம்முடனே இருக்குதம்மா!

அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பயித்தோலை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (34305)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

திருந்த வேண்டும்

யாழ்ப்பாண நகரத்தில் உள்ள ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களில் சிலவற்றில், காலாவதியான மருந்து வகைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும்—

அவை பறிமுதல் செய்யப்பட்டதாகவும்— தமிழீழ காந்தார சேவைகள் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இந்த மனித நேயமற்ற மனிதாபிமானம் இல்லாத, சமூக விரோதச் செயல் எடுத்த எடுப்பிலேயே கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

சாதாரண மனிதன் தான் நோயாளியாகிறான். ஆனால் நோயாளி என்ற வகையில் ஒருவன் மீது விசேட கவனமும், கருணையும், அன்பும் காட்டப்பட வேண்டும். அவனது நோய் தீர்ந்து அவன் சுகமடைவதற்கு உதவுவது மற்றவர்கள் கடமை.

மருந்துகள் நோய் தீர்ப்பதற்காகவே நோயாளிக்கு கொடுக்கப்படுகின்றன. உடல் உபாதையை நீர்ப்பது மட்டுமன்றி உயிரைக் காப்பதும் மருந்துகளே.

மருந்து, உரிய வைத்திய ஆலோசனையுடனும், நிர்ணயிக்கப்பட்ட அளவிலும், உரிய பக்குவத்துடனும் உகந்த பத்தியத்துடனும் உட்கொள்ளப்பட வேண்டியது. அளவிலோ, தன்மையிலோ சிறிய மாற்றம் ஏற்பட்டாலும், பெரிய விளைவை உண்டாக்கிவிடும். உயிரைக் காப்பதற்குப் பதிலாக, அதனைப் போக்கியும் விடலாம்!

மேலை நாட்டு (ஆங்கில) மருந்துகள் இரசாயனப் பொருள்கள் கொண்டு தயாரிக்கப்படுபவை. அதனால் அவற்றை வைத்திய ஆலோசனை இன்றி நோயாளன் தனது இஷ்டப்படி உட்கொண்டால், உடலில் பல பக்க விளைவுகளை உண்டாக்கும். ஆங்கில மருந்துகள் வியாதிகளை எவ்வளவுக்கு எவ்வளவு விரைவில்— வேகமாக — குணமாக்குகின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு பக்க விளைவுகளையும் பல்கிப் பெருக்கும்.

இரசாயனப் பொருள்களில் பலவும் காலம் போகப் போகத் தமது தன்மையில் மாறுபவை. ஆகையால் நாட்பட்ட ஆங்கில மருந்துகள், புதிதாக இருக்கும் போது எதிர்பார்க்கும் விளைவுக்கு நேர்மாறான பயனைக் கொடுத்துவிடும். நாட்பட்ட மருந்துகள் நஞ்சுக்குச் சமானமாகி நோயைத் தீர்க்காமல் மரணத்தையும் கொண்டுவரலாம். ஆங்கில மருந்து விற்பனையாளர்களுக்கு இது ஒன்றும் தெரியாத விடயமல்ல.

போர்ச் சூழ்நிலையால் உண்டான மருந்துத் தட்டுப்பாடு, மருந்துகளைத் தருவிப்பதில் உள்ள கஷ்டங்கள் என்பனவற்றை எதிர்கொண்டும் நோயாளிகளுக்கு உதவும் வித்தில் இவர்கள் தமது தொழிலைச் செய்வது ஒரு வகைத் தொண்டே.

ஆனால் நாட்பட்ட மருந்துகளை, பாவனைக்கு உகவாத மருந்துகளை, தரங் குறைந்த மருந்துகளை, போலி மருந்துகளை விற்பனை செய்யும்போது அவர்கள் செய்யும் தொண்டு மாசடைகிறது; ஊனமுற்று ஊறு விளைவிக்கிறது. தமது தொழிலுக்குரிய பொறுப்பை மறந்து, லாபத்தை — பணம் ஈட்டுவதை — நோக்கமாகக் கொண்டு, மனித நேயமற்ற முறையில் செயற்படுவது பெரும் ஈனத்தனமாகும். மக்களின் உயிரோடு விளையாடுவது மன்னிக்க முடியாத குற்றமுமாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கெடுபிடிகளால் நொந்து போனதால், குடாநாட்டு மக்களில் பெரும் சதவீதத்தினர் நோயாளிகளாக மாறியுள்ளனர். இந்த வேளையில் மக்களுக்கு உதவ வேண்டிய மருந்து வர்த்தகர்கள், உயிரைப் பறிக்கத் துணிந்து செயற்படுவது கிரிமினல் குற்றமாகக்கூட நோக்கப்பட வேண்டியதாகும்.

ஒரு சிலரால் சகல மருந்து வர்த்தகர்களையும் மக்கள் தமது எதிரிகளாக நோக்கும் நிலை உருவாகும். அது சமூக உறவுக்கு ஆரோக்கியமான தல்ல. ஆகையால், மருந்து வியாபாரிகள் உடனடியாகத் தாமாகத் திருந்தியாக வேண்டும்.

மருந்து வியாபாரம் என்ற பெயரில் மக்களை நோயாளர்களாக்குவதற்கும், கொல்லுதற்கு எவரையும் அனுமதிக்கலாகாது.

நன்னீர் பாதுகாப்பு பற்றி ஆய்வு நடத்த நிபுணர் குழு விரைவில் யாழ். வரும்

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ்ப்பாண மாநகரசபை உள்ளிட்ட 9 உள்ளூராட்சி சபைப் பிரதேசத்தில் நன்னீரைப் பேணுதல் தொடர்பாக ஆய்வு செய்ய நிபுணர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

யாழ். மாநகரசபை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகள், சுன்னாகம், ஊர்காவற்றுறை, நெல்லியடி பட்டினசபைகள், கோப்பாய், கொடிகாமம், நாவற்குழி பிரதேசசபைகள் உள்ளடங்கிய பிரதேசத்தில் நன்னீரைப் பேணுதல், கழிவுகளை அகற்றல், வடிகால் மைப்பு ஆகிய பிரச்சினைகள் குறித்து நிபுணர்குழு ஆய்வு செய்யவிருக்கிறது.

இது தொடர்பான கருத்துக்களை, ஆலோசனைகளை தெரிவிக்குமாறு யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் அந்தந்தப் பிரதேச மக்களையும், பொது அமைப்புக்களையும் கேட்டுள்ளார். (ஐ-3-4)

சமாதானப் பேச்சு வெற்றி பெற மெய்யான யுத்த நிறுத்தம் அவசியம்

தமிழ் அரசியல் கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு, டிச. 22

விடுதலைப் புலிகளுடனான அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெற மெய்யான யுத்த நிறுத்தம் அவசியம் என்று தமிழ் அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. இனப்பிரச்சினைக்கு அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வுகாண முடியும் என்றும் அவை தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளை தமது கட்சி ஆதரிக்கும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் இலங்கை வானொலிக்குத் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் பரந்துபட்டதாக இருக்க வேண்டும் என்றும்—

முன்னைய ஆட்சிக்காலத்தின் போது ஏற்பட்ட யுத்த நிறுத்தங்கள் பல சந்தர்ப்பங்களில் மீறப்பட்டுள்ளன என்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவரும், எம். பியுமான திரு. டி. சித்தார்த்தன் தெரிவித்தார்.

பிரேமதாஸா ஆட்சிக் காலத்தில் யுத்த நிறுத்தங்கள் அமுல் செய்யப்பட்ட வேளைகளில் தமிழ் அரசியல் கட்சிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின என்றும்—

யுத்த நிறுத்தம் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு சிரமங்களை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

ஜே. வி. பி. மாநாடு 95 ஏப்ரல் 5 இல்

கொழும்பு, டிச. 22

ஜே. வி. பி. இயக்கத்தின் மாநாடு அடுத்த ஆண்டு ஏப்ரல் 5ஆம் திகதி நடைபெற உள்ளது.

ஜே. வி. பி. இயக்க பதில் செயலாளர் குணசேன டி சில்வா பஸ்கடுவ பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி. மாநாட்டுக்கான பணிகள் ஆரம்பமாகி உள்ளன.

தற்காலிக மத்திய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜே. வி. பியின் தலைவராக லயனல் போபகேயும் செயலாளராக குணசேன டி சில்வா பஸ்கடுவவும் பொருளாளராக பியசேன பெரேராவும் தேசிய அமைப்பு சர்வதேச செயலாளராக டாக்டர் சந்திராவும்—

உப தலைவர்களாக சேமரத்னகளு ஆராய்ச்சி, தயா வணிசுசேகரா, ஜகத் ஹேமந்த ஆகியோரும் உதவிச் செயலாளர்களாக கிலரன்ஸ் பீரிஸ், கருணாகம நாயக்க, நெல்சன் தயானந்த ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜே. வி. பி. மத்திய குழுவில் 38 பேர் இடம்பெறுவர்.

எக்காரணத்தை முன்னிட்டும் கொள்கைகளை நடத்தவோ ஜனநாயகத்துக்கு எதிரான செயல்களில் ஈடுபடவோ எவருக்கும் அனுமதி வழங்கவில்லை என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

தொழிலாளரின் நலன்களுக்காகவே தொண்டா அடிக்கடி கட்சி மாறுகிறார்!

இ. தொ. கா. உபதலைவர் சதாசிவம் கூறுகிறார்

தோட்டத்தொழிலாளர்களை மனதில் வைத்துத்தான் திரு. தொண்டமான் ஒரு கட்சியில் இருந்து இன்னொரு கட்சிக்குச் செல்கிறார். இது என் கருத்து.

இ. தொ. கா வின் உப தலைவரும் நுவரெலியா மாவட்ட எம். பியுமான எஸ். சதாசிவம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தொழிலாளர்களின் உரிமைகளை இலகுவாக வென்றெடுக்கலாம் என்று கருதியே தொண்டமான் பொ. ஐ. மு. அரசுக்கு ஆதரவளிக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொ. ஐ. முன்னணிக்கு ஆதரவளிக்கும்படி நாம் தோட்டத் தொழிலாளரைக் கேட்கவில்லை; நடுநிலைமைதான் வகிக்கச் சொன்னோம்.

ஐ. தே. க. நாடாளுமன்றக்குழுவின் கூட்டத்தில் இ. தொ. கா. எம். பிக்கள் பங்கு பற்றினாலும், தொண்டமான் எடுக்கும் முடிவுகளுக்கு எதிராக நாம் செயல்படமாட்டோம். நாடாளுமன்றத்தில் தனிக் குழுவாகவே இ. தொ. கா. இயங்கும்.

இ. தொ. காவில் பிளவு என்பதை நான் மறுக்கின்றேன். ஆனால் பிளவை ஏற்படுத்த சில சக்திகள் முயல்கின்றன என்பதை நான் அறிவேன்.

இவ்வாறு அவர் சண்டே லீடருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். [ஐ-எ]

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவி

சிவில் அதிகாரி கிடைக்காததாலேயே ஹமில்டனின் பதவி நீடிக்கப்பட்டது!

கொழும்பு, டிச. 22

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்பதவிக்கு பொருத்தமான சிவில் அதிகாரி ஒருவர் கிடைக்காததைத் தொடர்ந்தே ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா அப்பதவியில் தற்காலிகமாக நீடிக்கப்பட்டார் என்று சிங்கள வாரஇதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் சிவில் அதிகாரி ஒருவரை நியமிப்பது என்று முன்னர் தீர்மானிக்கப்பட்டது.

தேர்தல் ஆணையாளர் திரு சந்திரானந்த டி சில்வாவை அப்பதவிக்கு நியமிக்க அவரது விருப்பம் கோரப்பட்டது. ஆனால் அவர் அதனை ஏற்க மறுத்துவிட்டார்.

தொடர்ந்து அப்பதவியை ஏற்குமாறு திரு லயனல் பெர்னாண்டோவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சமாதான முயற்சிகளில் தாம் ஈடுபட்டிருப்பதால் அதனை ஏற்க முடியாதுள்ளது என்று திரு. லயனல் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பின்னர் முன்னாள் பொலீஸ்மா அதிபர் சிறில் ஹேரத், முன்னாள் விமானப் படைத்தளபதி ஹரிகுணதிலக ஆகிய இருவரின் பெயர்களும் இப்பதவிக்கு பிரேரிக்கப்பட்டன. ஆனால் அவர்கள் இருவரும் பாதுகாப்புத் துறையை சேர்ந்தவர்கள் என்பதால் அது நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில் பாதுகாப்பு, அமைச்சின் செயலர் பதவிக்கு ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவையே தற்காலிகமாக நீடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

—இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-9)

தீர்வுக்கு வழிவகுக்கும்....

விவகாரம் குறித்து சந்திரிகா குமாரதுங்க மூன்று அல்லது நான்கு நிமிடமே கருத்துத் தெரிவித்தார்.

அதன் விவரம் வருமாறு:—

கேள்வி:— நாட்டில் மீண்டும் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என மக்களுக்கு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. கடந்த சில மாதங்களுக்குள் பொது மக்கள் ஜக்கிய முன்னணி அரசுக்கு மூன்று முறை — தென்னாசிய சபைத் தேர்தல், பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகிய மூன்று தடவைகளும் — மக்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

அமைதிப் பேச்சை ஆரம்பித்தீர்கள். அது பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

அதனால் அரசாங்கம் அமைதிப் பேச்சில் நம்பிக்கை இழந்துவிட்டது; பேச்சுக்களைக் கைவிடப்போகின்றது; என்பது போன்ற சந்தேகங்கள் வடபகுதி மக்களுக்கு ஏற்பட ஆரம்பித்துள்ளன.

சந்திரிகா:— எமது அரசைப் பொறுத்தவரையில் வடபகுதி மக்களினதும் புலிகளினதும் ஊகங்களில் எவ்வித உண்மையுமில்லை. நாம் எப்போதும் சமாதானம்பற்றியே கூறி வருதோம்.

பொதுத் தேர்தலின் பின் நாம் ஆட்சிக்கு வந்ததும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தோம். பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் — குறிப்பாக ஜனாதிபதி தேர்தல் நடக்கவுள்ள சூழ்நிலையிலும் கூட சமாதானப் பேச்சை மேற்கொண்டோம். நாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைத் தலைகீழாக மாற்றக்கூடிய மிக ஆபத்தான அரசியல் சூழ்நிலையிற்கூட நாம் அமைதிப் பேச்சில் ஈடுபட்டோம். ஜனாதிபதித்தேர்தலில் எமது போட்டி அபேட்சகர்கள் கேள்வி எழுப்பக்கூடிய நிலை இருந்தது என்பதை அறிந்திருந்தேன். கடந்த ஒக்டோபர் 23 ஆம் திகதி [illegible] குண்டு வெடிப்பு [illegible] காரணமாக அ[illegible] தற்காலிகமாகக் கைவிடப்பட்டன.

இரானுவத் தீர்வைக்காண அரசு எண்ணுகிறது என விடுதலைப் புலிகள் நினைக்கிறார்கள்.

அமைதிப் பேச்சின் உண்மை நிலை என்ன?

இருப்பினும் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதற்கு 3 கிழமைக்குப் பின்னர் — அதாவது நான் ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் எடுத்த ஒரு கிழமைக்குப் பின்னர் — அமைதிப் பேச்சுத் தொடர்பாக மீண்டும் நாங்கள் விடுதலைப்புலிகள் அமைப்புடன் கடிதத்தொடர்புகளை ஆரம்பித்தோம்.

இதுவரையில் — இம்மாதத்திற்குள் — சுமார் 6, 7 கடிதத் தொடர்புகள் இடம்பெற்றுள்ளன.

சிலவாரங்களுக்கு—முதலில் இரு கிழமைகளுக்கு யுத்த நிறுத்தத்தை தற்காலிகமாக மேற்கொள்வது பற்றி விடுதலைப் புலிகளுக்குத் தெரிவித்திருந்தோம்.

யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டபின்னர், மிகக்குறுகிய காலத்திற்குள் அமைதிப் பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற எமது எண்ணத்தை நாம் புலிகளுக்கு தெளிவாகத் தெரிவித்துள்ளோம்.

இவற்றுள் யுத்த விடயத்தை விடுதலைப் புலிகள் தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளனர். சமாதானப் பேச்சு வார்த்தைகள் என்ற விடயத்தையும் அவர் [illegible] பொறுப்பு தோரணையில் பதி[illegible]

யாழ்ப்பாணத்தவர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்ட 'கோட்டாவில்' யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதியர் உட்பட மூன்று கல்விமான்கள் செல்லவிருப்பதாகத் தெரியவந்தது.

வதிவிட வேளாண்மை போட்டிகள்

யாழ்ப்பாணம், டிச. 22

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது நலன் ஓம்பு நிலையங்களிலும், தனியார் வீடுகளிலும் தங்கி வாழும் மக்களிடையே வதிவிட வேளாண்மைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

சகல கிராம அலுவலர்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் கேட்டுள்ளார். (ஐ-4)

புலிகளின் குரல் வானொலியில்

22 — 12 — 1994
வியாழன் இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 —சித்தமருத்துவக் குறிப்புகள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — "சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதும், எதிர்காலத்திற்கான அடித்தளமாக அமைவதும் உட்கட்டுமானம்" சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — ஏட்டிலிருந்து "எரித்திரியா ஒரு நாட்டின் உதயம்" என்ற நூலிலிருந்து — "ஒரு நாடு உதயமாகிறது" எனும் கட்டுரை
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

23 — 12 — 1994
வெள்ளி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப்பாடல்கள்
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

ஜி. சீ. ஈ விடைத்தாள்கள் சென்றன

நடந்து முடிந்த ஜி. சீ. ஈ சாதாரண தரப்பரீட்சை விடைத்தாள்கள் அனைத்தும் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறையில் இருந்து கடந்த திங்களன்று கொழும்பிற்கு புறப்பட்ட 'கோமாரி' கப்பலில் விடைத்தாள்கள் அனைத்தும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ - 4)

வெளிநாட்டு தூதர்கள் பதவியேற்பது தாமதம்

கொழும்பு, டிச. 22

வெளிநாடுகளில் இலங்கைத் தூதர்களாக பணிபுரிய தெரிவு செய்யப்பட்டுள்ள புதியவர்கள் பதவியேற்பதற்காக புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் அங்குரார்ப்பணஞ் செய்யப்படும் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசு புதிய தூதர்களை நியமித்துள்ளது என்றாலும்— அவர்களின் நியமனங்களை நாடாளுமன்றத்தில் உள்ள நியமனத் தெரிவுக் குழு அங்கீகரிக்க வேண்டியுள்ளது என்று சொல்லப்படுகின்றது.

தற்போது நாடாளுமன்றக் கூட்டத் தொடர் கலைக்கப்பட்டுள்ளது என்றபடியால் புதிய தூதர்கள் ஜனவரி முதலாம் திகதி தத்தமது நாடுகளுக்கு சென்று பதவியேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. புதிய நாடாளுமன்றக் கூட்டத் தொடர் அடுத்த மாதம் ஆறாம் திகதி அங்குரார்ப்பணஞ் செய்யப்படவுள்ளது. (ஐ-எ)

வங்கியின் சமயாசமய ஊழியருக்கு நிரந்தரவேலை

கொழும்பு, டிச. 22

இலங்கை வங்கி நிர்வாகத்தின் கீழ் சமயாசமய சிற்றூழியர்களாக கடந்த பல வருடங்களாக சேவையாற்றி வந்த ஊழியர்கள் அனைவரும் "பி ஒசி மனேஜ்மென்ட் அன்ட் சப்போர்ட் சேர்விஸஸ்" என்ற நிறுவனத்தில் நிரந்தர ஊழியர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ. எல். அபேகுணவர்த்தனா இது குறித்து அறிவித்துள்ளார்.

சகல கொடுப்பனவுகளும் உட்பட மாதம் 2,500 ரூபா இவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

குடாநாட்டு மக்களிடம் பாண் பாவனை அதிகரிப்பு!

தட்டுப்பாட்டிற்கு அதுவே காரணம்

யாழ்ப்பாணம், டிச. 22

பொதுமக்களிடையே பாண் பாவனை அதிகரித்திருப்பதே தற்போது பாணுக்கு அடிக்கடி நிலவும் தட்டுப்பாட்டிற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாணின் விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்தும் வெளிச்சந்தையில் மாவுக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்பட்டு வருவதாலும் மக்கள் பாணை நுகர்வது முன்னெப்போதும் இருந்திராதபடி அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

பண்டிகைக் காலத்தை ஒட்டி பேக்கறி உரிமையாளர் சங்கத்துக்கு வாராந்தம் ஒதுக்கப்படும் மாவின் தொகையை யாழ். செயலகம் அதிகரித்துள்ளது.

இதுவரை வாராந்தம் 34 லொறி லோட் மா வழங்கப்பட்டு வந்தது. தற்போது அது 40 லொறி லோட்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

ஞான ஒளி பரப்பி வரும் யோகி சச்சிதானந்தாஜி

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தாஜி அவர்களின் 80 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

சுவாமி அவர்கள் பாரத நாட்டின் தென்பகுதியின் கோவையம் பகுதியைச் சேர்ந்த வணிகபுரி என்னும் செட்டி பாளையத்தில் 1914 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 22 ஆம் திகதி பிறந்தார். ஸ்ரீமான் கல்யாண சுந்தரம் — ஸ்ரீமதி வேலம்பை தம்பதிகளின் 2 ஆவது குமாரனாக இராமசாமி என நாமம் கொண்ட இவர் 1947 ஆம் ஆண்டில் இமய ஜோதி சிவானந்தமகரிஷி அவர்களைத் தரிசித்து, அவரின் பிரதம சீடர்களில் ஒருவரானார். 1949 ஆம் ஆண்டு ஆடி மாதம் 10 ஆம் திகதி சந்நியாசம் பெற்று. ஸ்ரீசுவாமி சச்சிதானந்தா ஆகினார். இவர் 1951 ஆம் ஆண்டில் அகில இந்திய யாத்திரை செய்து 1953 இல் சுவாமி சிவானந்த மகரிஷி அவர்களின் ஆசியுடன் இலங்கை வருகை தந்தார்.

1958 ஆம் ஆண்டில் உலகில் மிக உயர்ந்து விளங்குவதும், இறைவன் சாந்நித்தியம் பெற்றிலங்குவதுமான கைலையங்கிரிக்கு யாத்திரை செய்தார். 1959, 1961 ஆம் ஆண்டுகளில் கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று ஆத்மீகப் பணியில் ஈடுபட்டார்.

இவர் 1953 ஆம் ஆண்டு தொடக்கம் 1966 ஆம் ஆண்டு வரை எமது நாட்டில் எம் மனத்தில் நின்றும் நீங்காத இடத்தைப் பெற்று விட்டார்.

தமது குரு மகரிஷியாகிய சுவாமி சிவானந்தர் அவர்களின் கூற்றுக்கிணங்க எமது சுவாமி சச்சிதானந்தர் அகில உலகம் போற்றும் வகையில் ஞான ஒளி பரப்பிக் கொண்டு இருப்பது, திக்குத்தெரியாத சமுத்திரத்தின் மத்தியில் செல்லும் மாலுமிகளுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக அமைகின்றது.

சுவாமிகளது 80 ஆவது பிறந்த தினத்தில் அவர் காட்டும் ஒளிமயமான அருள் பாதையில் நாம் முன்னேறி சேவை, அன்பு, கொடை, தூய்மை, தியானம் என்பவற்றைக்கடைப்பிடித்துநாம்பிறந்ததின் பயனைப் பெற்றுய்வோமாக. ★

சுவாமி அவர்கள் பாரத நாட்டின் தென்பகுதியின் கோவையம் பகுதியைச் சேர்ந்த வணிகபுரி என்னும் செட்டி பாளையத்தில் 1914 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 22 ஆம் திகதி பிறந்தார். ஸ்ரீமான் கல்யாண சுந்தரம் — ஸ்ரீமதி வேலம்பை தம்பதிகளின் 2 ஆவது குமாரனாக இராமசாமி என நாமம் கொண்ட இவர் 1947 ஆம் ஆண்டில் இமய ஜோதி சிவானந்தமகரிஷி அவர்களைத் தரிசித்து, அவரின் பிரதம சீடர்களில் ஒருவரானார். 1949 ஆம் ஆண்டு ஆடி மாதம் 10 ஆம் திகதி சந்நியாசம் பெற்று. ஸ்ரீசுவாமி சச்சிதானந்தா ஆகினார். இவர் 1951 ஆம் ஆண்டில் அகில இந்திய யாத்திரை செய்து 1953 இல் சுவாமி சிவானந்த மகரிஷி அவர்களின் ஆசியுடன் இலங்கை வருகை தந்தார்.

1958 ஆம் ஆண்டில் உலகில் மிக உயர்ந்து விளங்குவதும், இறைவன் சாந்நித்தியம் பெற்றிலங்குவதுமான கைலையங்கிரிக்கு யாத்திரை செய்தார். 1959, 1961 ஆம் ஆண்டுகளில் கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று ஆத்மீகப் பணியில் ஈடுபட்டார்.

இவர் 1953 ஆம் ஆண்டு தொடக்கம் 1966 ஆம் ஆண்டு வரை எமது நாட்டில் எம் மனத்தில் நின்றும் நீங்காத இடத்தைப் பெற்று விட்டார்.

தமது குரு மகரிஷியாகிய சுவாமி சிவானந்தர் அவர்களின் கூற்றுக்கிணங்க எமது சுவாமி சச்சிதானந்தர் அகில உலகம் போற்றும் வகையில் ஞான ஒளி பரப்பிக் கொண்டு இருப்பது, திக்குத்தெரியாத சமுத்திரத்தின் மத்தியில் செல்லும் மாலுமிகளுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக அமைகின்றது.

சுவாமிகளது 80 ஆவது பிறந்த தினத்தில் அவர் காட்டும் ஒளிமயமான அருள் பாதையில் நாம் முன்னேறி சேவை, அன்பு, கொடை, தூய்மை, தியானம் என்பவற்றைக்கடைப்பிடித்துநாம்பிறந்ததின் பயனைப் பெற்றுய்வோமாக. ★

சி. கனகரத்தினம்
(தலைவர், யாழ். திவ்விய ஜீவன சங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

திருமதி தங்கராணி பரமானந்தம் (பேபி)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த தங்கராணி பரமானந்தம் 16-12-94இல் ஜேர்மனியில் காலமாகிவிட்டார். அவர் பரமானந்தத்தின் அன்பு மனைவியும், சிபோஜி, சுதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகசபை - கண்மணி ஆகியோரின் அருமை மகளும், தேவராசா, தவமணி, செல்வராணி, குலசிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சேனாதிராஜா (ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், கட்டட திணைக்களம்) வைத்தீஸ்வரன் (சுகாதார போதனாசிரியர்), சிவானந்த சரஸ்வதி, சரோஜினி ஆகியோரின் மைத்துனியும், சாந்தி, வசந்தி, கௌரி ஆகியோரின் சிறிய தாயாரும், தேவகி, தேவபிருந்தன், துவாரகா, கதன், சுமன், சுஜீவா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 22 - 12 - 94இல் ஜேர்மனியில் நடைபெறும். இன்று 22-12-94 இல் கொக்குவில் கனகசபை இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தேவராசா,
(சகோதரன்)

மஞ்சனவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (34296)

சரவணமுத்து செல்லத்துரை

(ஓய்வுபெற்ற பதிவாளர், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

தலையாளியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து செல்லத்துரை காலமானார்.

அன்னார் தங்கபூபதியின் அன்புக்கணவரும், புவனேஸ்வரன் (ஜேர்மனி), ராஜமோகன் (சம்பியா), இரத்தினராணி (லண்டன்), ராஜரோகன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், சுமலேஸ்வரி (ஜேர்மனி), சபாநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சத்தியராம், பிரணவன் ஆகியோரின் பாசமிகு பேரனும், தலையாளியைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகம்மா மற்றும் சோதிப்பிள்ளை, பூரணம், பூமணிதேவி, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் நடராசா ஆகியோரின் சகோதரரும், அமரசிங்கம், சிவரட்னம், காந்தபூபதி (லண்டன்), காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, டாக்டர் சத்தியமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (22 - 12 - 94) இல: 89, சச்சேரி நல்லூர் வீதியில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 3.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

செ. தங்கபூபதி
(மனைவி)

89, சச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (34297)

திருமதி தங்கம்மா சீனிவாசகம்

திருநெல்வேலி வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கம்மா சீனிவாசகம் 21-12-1994 காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சீனிவாசகத்தின் (மலேசியன் பென்சனியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை, அன்னமுத்து ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மகேந்திரா மற்றும் கமலபூசணி, தனபாலசிங்கம் (கனடா), நாகேந்திரா (மலேசியா), காந்திமதி நாகராஜா, தெய்வேந்திரா (இந்தியா), புஷ்பராணி வில்வராஜா, ராஜேந்திரா (லண்டன்), ஜெயராணி ஆனந்தசபாபதி, இந்திராணி ஜோர்ஜ் செட்டி (லண்டன்), ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், ஜெயலக்ஷ்மி நாகேந்திரா, R. நாகராஜா, தோ தெய்வேந்திரா, T. K. வில்வராஜா, K ஆனந்தசபாபதி, ஜோர்ஜ்செட்டி ஆகியோரின அன்புமாமியாரும், குணஜா, ஆரணன் (கனடா), கௌசிகா (கனடா), கைலேசன் (கனடா), கணேந்திரா (மலேசியா), சுவேந்திரா (மலேசியா), ஸ்ரீரங்கன், சஞ்சீவா (இந்தியா), றமணி (கனடா), தர்மேந்திரா (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அர்சுன் (கனடா), அபிநாத் (கனடா) ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-12-94) திருநெல்வேலியில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
இ. நாகராஜா
(மருமகன்)

''ஸ்ரீரங்கம்''
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். [34303]

திருமதி கனகம்மா இராசையா

கந்தர்மடம் அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா இராசையா 20 - 12 - 94 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் இராசையாவின் (இளைப்பாறிய உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம் - வவனியாகுளம்) அன்பு மனைவியும், திருமதி ரதி (கொழும்பு), ராதாக்கிருஷ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. சிவமூர்த்தி (கொழும்பு), விஜயா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், துர்க்காவின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சின்னையா—தங்கச்சியம்மாவின் மகளும், திருமதி சரஸ்வதி ஐயாத்துரை, செல்லையா (இளைப்பாறிய உத்தியோகத்தர்-சுகாதாரத் திணைக்களம்), இராசரத்தினம் (ஆசிரியர்-அச்சுவேலி), பாலசிங்கம் (லீவர் பிரதர்ஸ்-கொழும்பு), கனகரட்ணம் (உதவித் திட்டப் பணிப்பாளர் - சண்டிலிப்பாய்), அருளானந்தம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
T. V. இராசையா
(கணவர்)

93, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (34308)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22—12—91 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

முத்தமிழ்க் காவலர் மறைவுக்கு தமிழ் வளர்ச்சிக் கழகம் இரங்கல்

யாழ்ப்பாணம், டிச. 22

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் மறைவையொட்டி தமிழ் வளர்ச்சிக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு;-

தமிழ் மண்ணிலேயே தமிழ் மொழியை அடிமை மொழியாக்கி, தமிழகத்தில் கட்டாயமாக இந்திக் கல்வி நுழைக்கப்பட்டதை எதிர்த்துக் சளமைத்துப் போராடிய முத்தமிழ்க் காவலர் கி. ஆ பெ. விசுவநாதம் 70 ஆண்டுகளுக்கு மேலாகத் தான் ஆற்றிவந்த மொழி, இன நலன் காக்கும் பணியை இடைநிறுத்தி மீளாத் துயில் கொண்டதானது உலகத் தமிழினத்துக்கே பேரிடியாக அமைந்து விட்டது.

அன்னைத் தமிழ்மொழிக்கும் இன நலன்களுக்கும் கேடு வந்தும்போ பொழுதுகளில் எல்லாம் அவற்றை முன்னின்று எதிர்கொண்டு போராடும் முத்தமிழ்க் காவலரின் 70 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அயராத பணியைத் தமிழன்னை இழந்துவிட்டாள்.

எம்மருந் தமிழுக்கு அணியாகத் திகழும் திருக்குறள் பற்றியும் அதனை ஆக்கி எமக்களித்த வள்ளுவன் பற்றியும் பல ஆராய்ச்சி நூல்களைத் தந்ததோடு, தமிழ் மொழியின் சிறப்புப்பற்றியும் மக்களது நல்வாழ்வு ஒழுக்கம் பற்றியும் பல்வேறு நூல்களை ஆக்கி வழங்கியிருக்கிறார்.

தமிழ்மொழிக்கோ, இனத்துக்கோ, நாட்டுக்கோ எங்கிருந்து இழுக்கு ஏற்பட்டாலும் அதை எதிர்கொண்டு போராடும் முத்தமிழ்க்காவலரது இழப்பு தமிழினத்துக்கும் தமிழ்மொழிக்கும் தமிழ்மகத்துக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

முத்தமிழ்க் காவலரை இழந்து துயர ஆழியில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தமிழ்மக்களுக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரைப் போற்றி வணங்கி நிற்கிறது.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

தமிழ்மொழி ஆசிரியர் போட்டிப் பரீட்சை 28 இல்

50 நிலையங்களில் நடக்கும்

யாழ்ப்பாணம், டிச. 22

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழி ஆசிரியர்களை நியமிக்கும் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த சுமார் ஏழாயிரம் பேருக்கான போட்டிப் பரீட்சை 50 நிலையங்களில் நடைபெவிருக்கிறது.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்களை விமான மூலம் எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது. (ஓ-3)

ஆலோசனைக் கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், டிச. 22

அடுத்த ஆண்டு பிரதேச செயலக ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து ஆலோசிப்பதற்கான கலந்துரையாடல்கள் பிரதேச செயலக ரீதியாக இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றன.

பிரதேச செயலர்கள், உதவித் திட்டப் பணிப்பாளர்கள் ஆகியோரையும் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரையும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றி ஆலோசனை வழங்கும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுள்ளனர். பிரதேச செயலக ரீதியாக இன்று நாவலர் மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடல்கள் விவரம் வருமாறு:-

★ காலை 10 மணி:- யாழ், பிரதேச செயலகம்.

பிற்பகல் 2 மணி:- நல்லூர் பிரதேச செயலகம்.

நாளை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் கலந்துரையாடல்கள் விவரம் வருமாறு:-

காலை 10 மணி:- உடுவில் பிரதேச செயலகம்.

★ பிற்பகல் 2மணி:- தெல்லிப்பளை பிரதேச செயலகம். (உ)

முத்திரையிடல்

மானிப்பாய் பிரதேச சபை உப அலுவலகத்தில் இன்று வியாழன், நாளை வெள்ளி, எதிர்வரும் திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் —

காலை 8-30 மணி முதல் பிற்பகல் 1-30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்குமுத்திரையிடல்வேலைகள் நடைபெறும். (ஓ-30(

அமைச்சராக பெலே

பிரேசிலியா, டிச. 22

பிரேசிலின் முன்னாள் பிரபல்ய உதைபந்தாட்ட வீரராண பெலே அந்நாட்டின் விளையாட்டுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (க)

தபால்களை சேர்க்குக!

யாழ்ப்பாணம், டிச. 22

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக்கொண்டிருக்கும் 'ஹபரண' கப்பல் இவ்வார இறுதியில் கொழும்புக் செல்ல இருப்பதால், அக்கப்பலில் தபால் பொதிகள் எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

வெளியூர் தபால்களை சகல தபாலகங்களிலும் இன்று சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (ஓ-3)

யாழ்.பிரந்திய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றவு, வெற்றிலைக்கேணி, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு கட்டளையிடும் அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். (ஓ-3-6)

நத்தாருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நத்தாருக்கும் புத்தாண்டுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பமாகுமா என்பதைக் கூட இந்த மாநாட்டில் இருந்து உறுதிப்படுத்த முடியவில்லை.

முதற்கட்டப் பேச்சுக்களின் போது அரசுக் குழுவில் இடம் பெற்ற — தகவல் அமைச்சின் செயலாளரான — லயனல் பொன்னாண்டோ குறித்து யாழ்ப் பாணத்தில் உள்ள வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றியும் இந்த மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தாம் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக இருக்கையில் பயிலுநர், டிப்ளோமா ஆசிரியர்கள் நியமனத்தின் போது பெரும் ஊழல் இடம் பெற்றதாகப் கூறப்பட்ட குற்றச்சாட்டையே லயனல் இந்த மாநட்டில் மறுத்தார். (இவ்வாறு பி.பி.சி. குறிப்பிட்டது.) (உ-3)

கூடுதல்...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

ருக்கு மாதாந்தம் 1,300 ரூபா வழங்கப்படுகிறது. சாதாரண புலமைப் பரிசிலுக்கு மாதாந்தம் 1,250 ரூபா வழங்கப்படுகிறது.

உபகாரப் பணத் திட்டத்தின் கீழ் இறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஒரு மாணவருக்கு மாதாந்தம் 1,250 வீதமும் ஏனையோருக்கு 1,150 ரூபா வீதமும் வழங்கப்படுகிறது.

புதிய திட்டத்தினால் சுமார் 98 சதவீத பல்கலைக் கழக மாணவர்கள் நன்மை அடைவார்கள். (ஓ-5)

பிரபாவின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழினத்துக்கு கிடைத்த தன்னிகரில்லாப் பெரியார். பொது வாழ்க்கையிலும், செந்தொறியிலும் ஒழுகிய தமிழகத்தலைவர்.

தமிழகத்தலைவர்கள் பலர் தடுமாறிய தடுக்கி விழுந்த நேரங்களில் எல்லாம் — இன நலனுக்கு எதிராகச் செயற்பட்ட நேரங்களில் எல்லாம்— தயக்கமின்றி தட்டிக்கேட்டவர் அவர்.

தமிழகத்துக்கு வெளியேயும், உலகத் தமிழினத்துக்காக குறிப்பாக ஈழத்தமிழர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர் அவர்.

ஈழத் தமிழர்பால் பேரன்பு கொண்ட மூதறிஞர் கி. ஆ. பெ. ஒன்பது தடவைகள் தமிழீழத்துக்கு வருகை தந்தவர்.

தமிழகத் தலைவர்கள் பலர் தன்னலம் தலைக்கேறி ஈழத் தமிழர்கள் நலன்களை புறம் தள்ளி ஒதுக்கியும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இழிவுபடுத்தி எதிர்த்தும் வந்த நிலையிலும், கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று உழைத்த பெருந்தகை.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றிபெற வேண்டும் என்பதிலும், ஈழத் தமிழினம் விடுதலை பெற வேண்டும் என்பதிலும் பேரார்வம் கொண்டிருந்த முத்தமிழ் காவலர் எமது விடுதலைப் போராட்டத்துக்கு வீறு சேர்க்கின்ற வகையில் உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று சொற்பெருக்காற்றியவர்.

தன் வாழ்நாளிலே தமிழீழம் விடுதலை பெறவேண்டும். தமிழர்கள் தன்னாட்சி பெற்று வாழ்வதைக் காண வேண்டும் என்ற பேரவா கொண்டிருந்தவர் அவர்.

அன்னாரை இழந்து துயருறும் தமிழ்கூறு நல்லுலகத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகளும் தங்கள் துயரைப் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாருக்கு இறுதி வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.— இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ஓ-3)

புலிகளிடம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதி நிர்ணயிக்கப்படும் என்று உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. — இவ்வாறு அத்தப் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது. (உ-ஐ)

SPOKEN ENGLISH With GRAMMAR
By BRITTO
சனி ஞாயிறு வகுப்பு
புதிய பிரிவு ஆரம்பம்
24 - 12 - 1994
சனி காலை
12 — 1 மணி
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

நத்தார் நிகழ்ச்சிகள்

அசெம்பிளி ஒவ் கோட்

அராலி கிழக்கு

காலம்: இன்று 22-12-1994
மாலை 3 மணிக்கு ஆரம்பம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(34309) போதகர் சாம் ராஜசூரியர்

பயிலுநர் தேவை

திட்டமிடல் அலுவலர்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் எம்மால் கோரப்படுகின்றன. இதற்கான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. கல்வித் தகைமை:
   க. பொ. த (உயர்தரம்)
   (பொருளியல், கணக்கியல், வர்த்தகம் உட்பட)
2. மேலதிக தகைமை:
   ஆங்கில அறிவும் விரும்பத்தக்கது.
3. அனுபவம்:
   அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:
31 — 12 — 1994

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
பொது முகாமையாளர்,
திட்டக் கிளை,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு - நிறுவனம்.
சி-[10082]

எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில்)
411/1 K. K. S வீதி, யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
By
BRITTO
ஆரம்பம்: 22 - 12 - 1994
இன்று பி.ப. 3-30
(வியாழன், வெள்ளிகளில் வகுப்பு நடைபெறும்)
(சி-33)

மரண அறிவித்தல்கள்

கனகசபை சிவராமலிங்கம் (பத்தர்)

[முன்னாள் கன்னாதிட்டி இராஜேஸ்வரி ஆபரண மாளிகை உரிமையாளர்]

கொக்குவில் கிழக்கு, புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த கனகசபை சிவராமலிங்கம் 18 - 12 - 1994 அன்று காலை இறைபதம் எய்தினார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், நடராசா பத்தர் அவர்களின் அருமைச் சகோதரரும், வசந்தகோகிலம், ஜெயவதனி, விமலாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், இரவியலட்சுமி, தர்மகிருஷ்ணர், யோகேஸ்வரி, சரோஜாதேவி, தேவராணி ஆகியோரின் சிறிய தந்தையாரும், சண்முகசுந்தரம் (பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), மச்சேந்திரகுமார் (பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற நடேசன் ஆச்சாரி, காலஞ்சென்ற இந்திராதேவி (மட்டக்களப்பு), காலஞ்சென்ற ஆனந்தசுந்தரம் (D. O. A.), தங்கவேல் (அதிபர், சென்சேவியர், திருகோணமலை), செல்வராஜா (தொழில் நுட்பக்கல்லூரி இலிகிதர்) ஆகியோரின் வழி மாமனாரும், திருச்செல்வி, திருமலர், திருக்குமரன், திருவேணி, பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22- 12- 94) பிற்பகல் 1. 00 மணியளவில் கொக்குவில் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
க. நடராசா பத்தர்
(அப்பா)
(சகோதரன்)

புகையிரதநிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில் (34307)

கணபதிப்பிள்ளை குமரகுரு

தோப்புக்காடு காரைநகரைச் சேர்ந்த, யாழ். மாவட்ட கூட்டுறவுச் சேவைச் சமாசத்தின் முன்னாள் தலைவரும், தோப்புக்காடு முருகன் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும், பிரபல சமூக சேவையாளரும், இளைப்பாறிய அதிபருமான கணபதிப்பிள்ளை குமரகுரு நேற்று 21- 12- 94 சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் ஏகபுதல்வனும், வள்ளியம்மையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற திருமதி நாராயணசாமி சிவபாக்கியத்தின் அன்புத்தந்தையும், திருமதி திருநாவுக்கரசு அலிலாண்டேஸ்வரியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-12-94) வியாழக்கிழமை நண்பகல் 12. 00 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் வழக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்;
கு. வள்ளியம்மை
(மனைவி)

கபில் வீதி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (34310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org